# தாய்மார்களிற்கான நற்செய்தி 2014



# *தாய்மார்களிற்கான நற்செய்தி 2014*

- புபுது பாடல் இல 226 (சிங்களப் பாடல்)
- மீளப்பார்த்தல்

  உங்களுக்கு நினைவிருக்கும் இறை அரசிற்காக நாம் செல்ல வேண்டிய இடத்தை முன் கொண்டு கடந்த பல மாதங்கள் வழியாக இறைவன் எம்மை அழைத்து வந்தார். அதன் வழியாக எமது குடும்பத்திற்கு முதலிடம் கொடுத்து உயர்த்தியவாறு கிறிஸ்துநாதர், குடும்பத்திற்கு மாத்திரம் கட்டுப்படாமல் முழு தேசத்திற்கும் இந்நற்செய்தியை எடுத்துச் செல்வதற்கு எம்மை அழைத்தார். கடந்த நத்தார் காலத்தில் இறை அரசிற்காக ஏழைகளுக்குள் ஏழையாகி கிறிஸ்துநாதரைப் போல் ஏழ்மையை அரவணைத்துக் கொள்வதற்கு எம்மை அழைத்தார். அவர் ஏழ்மையின் அனுபவத்தை அனுபவித்தது போல் எமக்கும் இந்நத்தாரில் ஏழ்மையை அரவணைத்துக் கொண்டு அதை அனுபவித்தவாறு அதன் வழியாக புதியதொரு பிறப்பிற்கு எம்மை அழைத்தார்.
- நற்செய்தி

  ***அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்.*** (புனித மத்தேயு 5:9) இறை அரசை முன்கொண்டு நான் இருக்க வேண்டிய இடத்தைப் பற்றி கடந்த நற்செய்தி வழியாக கிறிஸ்துநாதர் எம்மை முறையாக அழைத்து வந்தார்.

  புனித மத்தேயு 5:9 - இறை அரசிற்காக எவராவது, எங்கேயாவது அமைதியை ஏற்படுத்துவார்களானால் அவர் இறைவனுடைய புத்திரன்.

  மகனானவரினுள் இம்முழுமையான அமைதி இருந்தது. அதனுள் இருந்த மகிழ்ச்சி அவரினுள் மாத்திரமே வழிந்தோடியது.

  நாம் இவரைப் பற்றி அறிந்திருக்கிறோம். அவர் அமைதியை முன்கொண்டு ஆதியில் தொடக்கம், பழைய ஏற்பாட்டின் வழியாக வெளிப்பட்டார். அவர் அமைதியின் குமாரன் என்று (எசாயா 9:7) அவர் வரவிருப்பவர் என்று, தந்தையிடமிருந்து எடுத்து வரும் அமைதியை எம்மத்தியில் வெளிப்படுத்தும் குமாரனாக விசுவசித்தபடியினால் அவரை அமைதியின் குமாரனாக அழைத்தார்கள்.

  அவருடைய பிறப்புடன் விண்ணக தூதர்கள் அனைவரும் தந்தையை வாழ்த்தியது ***"உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!"***என்றாகும். (புனித லூக்கா 2:14)

  கிறிஸ்துநாதருக்குள் இருந்த அமைதி

  அப்படியானால் இவர் கொண்டுவந்த அமைதி என்ன? (கலந்துரையாடுங்கள்)

  பிலிப்பு 2:1-11

  01. தந்தையானவருக்கு முழுமையாக உரிமையாகுதல்
  02. தந்தையின் அன்பிற்கு முழுமையாக அடிபணிதல்
  03. ஆவியானவருடனான நிரந்தர தொடர்பின் வாழ்க்கை
  04. மற்றவர்களுக்குள் தந்தையை அனுபவித்தல்

  இதன் வழியாக அவர் முழுமையான மகிழ்ச்சியை அனுபவித்தார். எத்தகைய மகிழ்ச்சியை அனுபவித்தார்கள் என்றால், அவரைக் கண்டவுடன் மற்றவர்களுக்குள் அமைதி, மகிழ்ச்சி வழிந்தோடியது. (புனித யோவான் 20:19-20)

- அவரது உயிர்ப்புடன் அவர் சந்தித்த அனைவருக்கும் இவ் அமைதியை வாழ்த்தினார்.
- பயந்து நடுங்கிக்கொண்டு கதவுகளை மூடிக் கொண்டு இருந்த சீடர்களுக்கு அவர் இம்மகிழ்ச்சியை கொடுத்தார். அவர் இம்மகிழ்ச்சியை எடுத்து உலகெங்கும் செல்லுமாறு அவர்களை அனுப்பினார்.
- தந்தையின் எதிர்ப்பார்ப்பு, தந்தையின் விருப்பம், இம்மகிழ்ச்சியை, அமைதியை பெலவீனமான வேதனையுடன் இருக்கும் மக்களுக்கு எடுத்துச் செல்வது என்பதை மகன் அறிந்திருந்தார். விழிப்புற்று இருந்தார்.
- அவ்விருப்பத்தை நிறைவேற்றுவதன் மூலம் மக்களுக்கு மகிழ்ச்சியை அமைதியை மலரச் செய்ய முடியுமென அவர் அறிந்திருந்தார்.
  அதற்காக அவர் தன் வாழ்க்கையை பலியாக்கினார். மரணத்திற்கு உள்ளாகினார். கைவிடப்பட்டார், ஒதுக்கப்பட்டார். வேதனைகளுக்கு உள்ளாகினார். தனது ஆசைகளை தியாகம் செய்தார். இதன் வழியாக மக்களுக்கு அமைதியை ஏற்படுத்தி தந்தையை மகிமைப்படுத்தினார்.
- மகனானவருக்குள் இருந்த அமைதி தந்தையானவரின் அரசினுள் காணவிருக்கும் மாட்சி மிகுந்த அமைதியாகும்.

பேறுபெற்ற தாயாரினுள் இருந்த அமைதி

** பேறுபெற்ற தாயாரை நோக்கும் போது அவரினுள் இருந்த அமைதி எத்தகையது? (கலந்துரையாடுங்கள்)

* அவர் நிரந்தரமும் இறைவனிடம் தனது உள்ளத்தை உயர்த்தியவாறு, பரிசுத்த ஆவியானவருக்கு இடமளித்தவாறு இவ் அமைதியை, மகிழ்ச்சியை அனுபவித்தார்.

* அனைத்தையும் மனதில் பதிய வைத்தவாறு தேவதாயாரினுள் இருந்த அமைதியை சிலுவை மரணம் வரையும், இறுதியில் மேல் மாடி வரை எடுத்து சென்றார்.

* பன்னிரண்டு சீடர்களுள் சிலுவையடிவாரத்தில் ஒரு சீடர் மாத்திரமே இருந்தார். (சீடனான யோவான்) ஆனாலும் மகனானவருக்குள் இருந்த வாழ்க்கையைப் பற்றிய சிந்தனை தேவதாயாருக்கு இருந்தபடியினாலேயே, மேல் மாடியில் சீடர்கள் அனைவருடனும் ஒன்றிணைந்து இருக்க அவருக்கு முடியுமாக இருந்தது.

* ஆகையால் தேவதாயாருக்குள் இம்முழுமையான அமைதி வழிந்தோடியது. மற்றவர்கள் அதன் மகிழ்ச்சியை, வல்லமையை அனுபவித்தார்கள்.

எனக்குள் இருக்கும் அமைதி

** எனக்குள் அமைதி இருக்கின்றதா? மகிழ்ச்சியை, விடுதலையை அனுபவிக்கின்றேனா? (கலந்துரையாடுங்கள்)

* கிறிஸ்துநாதருக்குள்/ பேறுபெற்ற தாயாருக்குள் இருந்த அமைதி எனக்குள் இருக்கின்றதா?

* தாயார் ஒருவராக, என்னைக் காணும் பொழுது மற்றவர்களுக்குள் இவ் அமைதி, மகிழ்ச்சி வழிந்தோடுகின்றதா? (கணவனுக்கு/ பிள்ளைகளுக்கு/ அயலவர்களுக்கு/ சங்கத்திற்கு/ பங்கிற்கு/ நாட்டிற்கு..................)

* மற்றவர்களுக்குள் அமைதியை ஏற்படுத்துவதற்கு, மகிழ்ச்சியால் நிரம்புவதற்கு நான் மரணத்தை அனுபவிக்கின்றேனா?

1. கிறிஸ்துநாதருக்கு நான் முழுமையாக உரிமையாகி உள்ளேனா?
2. முழுமையான இவ் இறைவனின் அன்பிற்கு கட்டுப்பட்ட தாயார் ஒருவரா?
3. பரிசுத்த ஆவியானவருடன் தொடர்புடைய வாழ்க்கையை நான் நிரந்தரமும் அனுபவிக்கின்றேனா?
4. எனது சகோதரனுள் உயிர்த்த கிறிஸ்து நாதரை நான் சந்திக்கின்றேனா?

என் பக்கம்

* பிலிப்பியர் 2:1-11
* கிறிஸ்துநாதருக்குள் இருந்த சிந்தனையை எமக்குள் ஏற்படுத்திக் கொள்வோம்.
* அவர் அதற்காக அனைத்தையும் கைவிட்டது போல் / வெறுமையாகியது போல் நாமும் வெறுமையாகுவோம். (பிலிப்பியர் 2:6)
* இவ் சிந்தனைகளை ஏற்படுத்தியவாறு எம்மை, மகிழ்ச்சியை அமைதியை எடுத்துச் செல்லுமாறு கூறுகின்றார்.
* எம்மை இவ்வாறு வெறுமையாக கூறுவது பரிசுத்த திருத்துவம் எனும் சங்கத்தினுள் இருந்த அமைதி மகிழ்ச்சியை, உயிர்த்த கிறிஸ்துநாதரை சந்தித்ததன் மூலம் பெற்ற இம் மகிழ்ச்சியை எம் வழியாக எம்மை காண்பவர்களுக்கு கிடைத்து இவ் அமைதி மகிழ்ச்சியை மற்றவர்களுக்குள் வழிந்தோடச் செய்யும் முகமாகவே.

** இவ்வருட ஆரம்பத்திலேயே அவர் எமக்கு தூதுச் சேவை ஒன்றை கையளிக்கின்றார். 'தந்தையானவர் என்னை அனுப்பியது இவவுலகத்திற்கு அமைதியை பெற்றுக் கொடுப்பதற்கேயாகும். எனது உயிர்ப்பின் நற்செய்தியுடன் இன்று உங்களை நான் அனுப்புகிறேன். வீட்டிற்கு வீடு, உள்ளத்திற்கு உள்ளம் இவ் அமைதியை எடுத்துச் செல்வதற்காகும்'.

* அனைத்து பீடணைகள், பிரச்சனைகள், போராட்டங்கள், வேதனைகள்............ என்னும் மதில்களை தகர்த்தெரிந்து பரிசுத்த ஆவியானவருடன் ஆழமான தொடர்பினுள் இவ் "அமைதியை எடுத்துச் செல்லும், அனுப்பப்பட்ட அமைதியின் தாயாக" இன்று இவ்வருட ஆரம்பத்திலேயே அவர் எம்மை அனுப்புகிறார்.

* நாம் இவ் அமைதியை எடுத்து உலகமெங்கும் செல்வோம். எங்களது குடும்பத்தில் ஆரம்பித்து முழு அகிலத்திலும் இவ் அமைதி மகிழ்ச்சியை முழுமையாக வழிந்தோடுவதற்கு ஆரம்பித்து செயல்படுவோம்.

***இயேசுக்கிறிஸ்துநாதரே, உயிர்த்த ஆண்டவரே உமது அமைதி எங்களில் வெளிப்பாடாகட்டும்!***

*செயல்பாடு*

1. பிலிப்பியர் 2:3-5 வரையான பகுதியை நிரந்தரமும் வாசித்தவாறு செயல்பட முயற்சி எடுங்கள்.
2. புபுது கிதாஞ்சலியில் 105 வது பாடலை உதவிக்கு எடுத்துக் கொண்டு இவ் அனுபவத்தை அனுபவிப்பதற்கு தொடங்குங்கள்.

3. பேறுபெற்ற தாயாருக்கு நடுநிலை வகிக்குமாறு கூறி விசேடமாக ஒவ்வொரு நாளும் செபமாலையை உச்சரியுங்கள்.